# <u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>

**DV.No.2/2025**

**PW.1**

**நாள்: 01.06.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. பவித்ரா | வயது | |
| கணவர்/தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | வட்டம் | |

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை;</u>

2. நான் செட்டிநாடு மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் அங்கு Assistant Medical Superintendent ஆக பணியில் உள்ளேன். எங்கள் திருமணம் தரகர் மூலமாக வந்த வரன் என்றால் சரிதான். எங்கள் நிச்சயதார்த்தம் கடந்த 04/12/2022 அன்று நடந்தது என்றால் சரிதான். நிச்சயதார்த்தத்திற்கு முன்பாகவே எதிர்மனுதாரர் ரேலா மருத்துவமனையில் பணிபுரிவது எனக்கு தெரியும் என்றால் பத்திரிக்கை போடும்போது தான் அந்த விவரம் தெரியவந்தது. ஆனால் நான் மனுவில் எதிர்மனுதாரர் திருமணத்தின் போது கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் பணிபுரிவதாக எங்களிடம் பொய் சொன்னதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் நிச்சயதார்த்தம் பத்திரிகை போடும் வரையில் கீழ்ப்பாக்கம் அரச மருத்துவமனையில் பணிபுரிவதாக தான் எங்களிடம் சொல்லி வைத்தார்கள். பத்திரிக்கை போடும்போது தான் அவர் எங்கு பணிபுரிகிறார் என்பதை சொன்னார்கள்.

3. எதிர்மனுதாரர்களுக்கு 1ஆம் எதிர்மனுதாரர் தனது பணி சம்பந்தமாக எங்களிடம் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் அதனால்தான் நிச்சயதார்த்த பத்திரிகை போடும்போது நாங்கள் கேட்டதன் பேரில் அவர் ரேலா மருத்துவமனையில் பணிபுரிவதை என்னிடம் சொன்னார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தன்னுடைய பணி சம்பந்தமாக எங்களிடம் பொய் உரைத்திருந்தால் நிச்சயதார்த்தத்தின் போது அவர் எங்கு பணிபுரிகிறார் என்ற விவரத்தை சொன்ன உடனேயே நாங்கள் திருமணத்தை நிறுத்தி இருப்போம் என்றாலும் எனவே எதிர்மனுதாரர் தனது பணி சம்பந்தமாக எங்களிடம் எந்த பொய்யும் சொல்லவில்லை என்றால் எங்கள் திருமணம் சம்மதமாக உறவினர்கள் நண்பர்கள் அனைவரிடமும் சொன்ன பிறகு எதிர்மனுதாரர் மருத்துவர் என்பதாலும் அவர் ஏதோ ஒரு இடத்தில் வேலை செய்கிறார் என்பதால் தான் அந்த திருமணத்திற்கு ஒப்புக்கொண்டோம்.

4. எங்கள் திருமணம் 2022 ஆம் ஆண்டு நிச்சயதார்த்தத்திற்கு பிறகு எப்போது நடந்தது என்றால் 2024 ஆம் ஆண்டு நடந்தது. அந்த இரண்டு ஆண்டுகளில் எங்கள் இரு குடும்பத்திற்கும் இடையே திருமணம் சம்பந்தமாக பலமுறை பேச்சுவார்த்தை நடந்தது என்றால் சரிதான். அந்த பேச்சுவார்த்தையின் போது எதிர்மனுதாரர்களுக்கு கடன்கள் இருந்ததால் திருமண செலவை இரு குடும்பத்தாரும் சரி சமமாக பிரித்துக் கொள்ளலாம் என்று பேசப்பட்டது என்றால் சரியல்ல. என்னை பெண் பார்க்க வந்த போதே திருமண செலவுகளை உங்களால் பார்க்க முடியாது என்பதை என் பெற்றோர் எதிர்மனுதாரர்களுக்கு தெரிவித்துவிட்டனர். அதன் பிறகு நடந்த பேச்சுவார்த்தையின் போது ரூ.5,00,000/- கொடுத்தால்தான் திருமணத்தை நடத்த முடியும் என்று எதிர்மனுதாரர்கள் சொன்னார்கள்.

5. திருமண செலவிற்காகத்தான் எதிர்மனுதாரர்கள் அந்த தொகையை கேட்டார்கள் என்றால் சரிதான். திருமண பேச்சுவார்த்தையின் போது 1ஆம் எதிர்மனுதாரருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் கடன்கள் உள்ள விவரம் எங்களுக்கு தெரிய வந்தது என்றால் இல்லை. 1ஆம் எதிர்மனுதாரரின் தம்பி ஊரில் இருந்து வந்த பிறகு திருமணம் வைத்துக் கொள்ளலாம் என்று தான் சொல்லி வந்தார்கள். திருமணம் 2-3 முறை நிச்சயக்கப்பட்டு தடைப்பட்டது என்றால் சரிதான். 1ஆம் எதிர்மனுதாரர் மூலமாக அவருக்கும் அவருடைய குடும்பத்திற்கும் கடன் சுமை அதிகமாக உள்ளதாலும் அவர்களின் நிதி நிலைமை காரணமாக தான் திருமணம் தள்ளிப் போவது எனக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல.

6. நிச்சயதார்த்தத்திற்கு பிறகு 1ஆம் எதிர்மனுதாரர் பணிபுரிந்த ஒரகடம் மருத்துவமனையில் நான் அவரை சந்தித்தேன் என்றால் சரிதான். நிச்சயதார்த்தத்துக்கு பிறகு எனக்கும் 1ஆம் எதிர்மனுதாரருக்கும் இடையே நல்ல புரிதல் இருந்தது என்றால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதாரரின் அக்கா மற்றும் பெற்றோர் இடம் கேட்டுக் கொண்டதால் நான் அவரிடம் பேசினேன். அப்போதும் கூட அவர் சரியாக என்னிடம் பேச மாட்டார். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் 1ஆம் எதிர்மனுதாரர் நிச்சயதார்த்தத்திற்கு பிறகு என்னிடம் நல்லபடியாகத்தான் பேசி வந்தார் என்றாலும் நான் வழக்கிற்காக அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. அவர் அவ்வாறு என்னிடம் பேசாதது எனக்கு வினோதமாக தெரியவில்லையா என்றால் எனக்கு அவ்வாறு தான் பட்டது. அது குறித்து நான் என்னுடைய

பெற்றோரிடமும் அவரது பெற்றோரிடமும் கூறினேன். அதற்கு 1ஆம் எதிர்மனுதாரரின் பெற்றோர் தன் மகன் அதிகமாக பேசும் சுபாவம் கொண்டவர் இல்லை என்றும் நானாகத்தான் அவரிடம் பேச வேண்டும் என்று சொன்னார்கள். எங்கள் திருமணத்திற்கு முன்பாக இரண்டு ஆண்டுகள் இடைவெளி இருந்ததால் 1ஆம் எதிர்மனுதாரர் குறித்து எனக்கு நல்ல புரிதல் இருந்தது என்றால் சரியல்ல. நான் ஒரு மருத்துவர் என்பதால் புரிதல் இல்லாத ஒரு நபருடன் வாழ முடியாது என்பது எனக்கு நன்கு தெரியும் என்றாலும் ஆனால் நான் இரண்டு ஆண்டு கால இடைவெளியில் அவருடன் நல்ல புரிதல் இருந்ததால்தான் அவரை நான் திருமணம் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பெற்றோரின் கலன் கருதியும், சமுதாயத்தில் அனைவருக்கும் திருமணம் குறித்து தெரிய வந்ததாலும், எங்கள் நிச்சயதார்த்தம் வெகு விமர்சையாக நடந்ததாலும் திருமணம் ஆன பிறகு எதிர்காலத்தில் அவர் மாறிவிடுவார் என்பதாலும் தான் நான் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டேன்.

8. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் உண்மையில் எங்களுக்கிடையே புரிதல் இல்லாமல் இருந்திருந்தால் நான் திருமணத்தையே நிறுத்தி இருப்பேன் என்றால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதாரர் மூலமாக அவர்களின் குடும்ப நிதி நிலைமை எங்களுக்கு தெரியவந்ததால் தான் எதிர்மனுதாரர்கள் திருமண செலவிற்காக ரூபாய் 5 லட்சம் கேட்டபோது நாங்கள் ரூபாய் ஒன்றரை லட்சம் கொடுத்தோம் என்றால் 1ஆம் எதிர்மனுதாரரின் தந்தை அப்போது அவருக்கு தொழிலில் வரவேண்டிய பணம் வராததால் எங்களிடம் பணம் கேட்பதாகவும் அவ்வாறு கொடுத்தால் அக்டோபர் மாதத்தில் திருமணம் வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னால்தான் கொடுத்தோம். எதிர்மனுதாரரின் வீடு மற்றும் நிலங்களை நாங்கள்

பார்வையிட்டோமா என்றால் என் பெற்றோர் வீட்டை பார்த்து உள்ளார்கள்.

9. பாண்டிச்சேரியில் இருந்து கடலூர் செல்லும் வழியில் நாங்கள் அனைவரும் கோயிலுக்கு செல்லும்போது அறுபடைவீடு மருத்துவ கல்லூரி அமைந்துள்ள இடத்தின் அருகில் ஒரு நிலம் உள்ளதாக சொன்னார்கள். 1 ஆம் எதிர்மனுதாரர் தான் சொன்னார். அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் வழக்கிற்காக போய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. திருமண செலவிற்காக நாங்கள் ரூ.3,50,000/- கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர்கள் தான் கடன் பெற்று அந்த திருமணத்தை நடத்தினார்கள் என்றால் அந்த திருமணம் நிச்சயிக்கப்பட்டு இரண்டு மூன்று முறை தடைபட்டதால் நானே திருமணத்தை நிறுத்தி விடுங்கள் என்று என் பெற்றோரிடம் சொன்னேன். அதன் பிறகு தான் 1 ஆம் எதிர்மனுதாரர் எங்கள் வீட்டிற்கு வந்து அவரே திருமண செலவுகள் அனைத்தையும் பார்த்துக் கொள்வதாகவும் ஜனவரி மாதத்தில் திருமணம் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லித்தான் அந்த திருமணமும் நடந்தது.

10. எங்கள் திருமணத்தின் போது எதிர்மனுதாரர்கள் எங்களிடம் வரதட்சணை ஏதும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் குடும்பத்தில் அனைவரும் வரதட்சணை கேட்டார்கள். எனக்கு 30 சவரன் நகைகளும் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு 5 சவரன் நகைகளும் வெள்ளி பொருட்களும் வீட்டு உபயோக பொருட்களும் வேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள். 1 ஆம் எதிர்மனுதாரரும் என்னுடைய வீட்டில் ஒப்புக்கொண்டதை செய்து விடும்படி என்னிடம் சொன்னார். 1 ஆம் எதிர்மனுதாரர் என்னிடம் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் எதிர்மனுதாரர்கள் குடும்பத்தாரும்

எங்கள் பெற்றோரிடம் வரதட்சணை எதுவும் கேட்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.திருமணத்திற்கு பிறகு என் பெற்றோர் எனக்கு போடப்பட்ட 30 சவரன் நகைகளையும் 1ஆம் எதிர்மனுதாரிடம் தான் கொடுத்தார்கள்.

11. அந்த நகைகள் அனைத்தும் என்னிடம் தான் உள்ளதா என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகும் கூட அந்த நகைகள் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. ½ சவரன் கம்மல், ½ சவரன் மோதிரம், 1ஆம் எதிர்மனுதாரருக்கு போடப்பட்ட 3 சவரன் தங்க சங்கலி, காப்பு 2 சவரன், அவருக்கு போடப்பட்ட ½ மோதிரம் மற்றும் என்னுடை வெள்ளி கொலுசு – 1 ஜோடி ஆகியவை அவரிடம் தான் உள்ளது. திருமணத்தின்போது எதிர்மனுதாரர்கள் எனக்கும் நகைகள் போட்டார்கள் என்றால் சரிதான். அது எத்தனை சவரன் என்றால் 5 சவரன். எங்கள் திருமண வரவேற்பு நிகழ்ச்சி 28/01/2024 அன்று திருப்போரூரில் வெகு விமர்சையாக ஏற்பாடு செய்யப்பட்டது என்றாலும் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று 1ஆம் எதிர்மனுதாரர் எனது பெற்றோரிடம் சொன்னார் என்றால் சரியல்ல.

12. அந்த வரவேற்பு நிகழ்ச்சியை விமர்சையாக செய்ய வேண்டாம் என்றும் திருமணத்திற்காக ஒன்றாம் எதிர்மனுதாரர் கடன் பெற்றுள்ளதாகவும் அந்த கடனை அடைத்துவிடலாம் என்று அவர் என் பெற்றோரிடம் சொன்னபோது என் அப்பா அதற்கு மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. என்னுடைய மனதில் 1ஆம் எதிர்மனுதாரர் திருமண வரவேற்புக்காக ஆடைக்கு ரூ.10,000/– கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் நாங்கள் தான் திருமண வரவேற்பை வெகு விமர்சையாக நடத்த வேண்டும்

என்பதற்காக 1ஆம் எதிர்மனுதாரருக்கு அந்த தொகையை கொடுத்தோம் என்றால் 1ஆம் எதிர்மனுதாரர் திருமண வரவேற்பு முந்தைய நாள் வரையில் அதற்கான ஆடையை வாங்காததால் நாங்கள் வேறு வழியின்றி அந்த தொகையை கொடுத்தோம். திருமணத்திற்கு முன்பாக எதிர்மனுதாரர்களின் கடன் சுமை எனக்கு நன்கு தெரிய வந்ததால் திருமணத்திற்கு பிறகு என்னுடைய சம்பளத்தில் இருந்து ஒரு பகுதியை நான் அவருக்கு கொடுப்பதாக பேசப்பட்டது என்றால் சரியல்ல.

13. 1ஆம் எதிர்மனுதாரர் சம்பளம் எதுவும் கேட்க மாட்டேன் என்றும் என்னுடைய சம்பளத்தை நானே வைத்துக் கொள்ளலாம் என்று தான் என்னிடம் சொல்லி இருந்தார். 1ஆம் எதிர்மனுதாரர் அவ்வாறு என்னிடம் சொல்லவில்லை என்றாலும் அவரது நிதி நிலைமை எனக்கு நன்கு தெரிந்து தான் என்னுடைய சம்பளத்தின் ஒரு பகுதியை நான் அவருக்கு வங்கி மூலமாக அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதாரர் என்னிடம் சண்டை போட்டு தான் சம்பள பணத்திலிருந்து ஒரு பாதியை அவரது வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைத்தார். எந்த காலத்திலும் 1ஆம் எதிர்மனுதாரர் அவ்வாறு சண்டையிட்டதில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சம்பளத்தொகை முழுவதையும் நான் 1ஆம் எதிர்மனுதாரருக்கு முடித்து விடுவதால் சில நாட்கள் சாப்பிடுவதற்கு வழி இல்லாமல் பட்டினியாக இருந்ததாக என்னுடைய மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

14. என்னுடைய மாத சம்பளம் ரூபாய் 50,000 அதில் நான் தவணை செலுத்த ரூ.18000/- போக மீதம் ரூ.30,000/- நான் 1ஆம் எதிர்மனுதாரருக்கு கொடுக்க

வேண்டும் எனவே என்னுடைய தனிப்பட்ட செலவிற்கு கூட நான் அவரிடம் தான் காசு கேட்கவேண்டும். நானே 1ஆம் எதிர்மனுதாரருக்கு ரூ.30,000/- கொடுத்தது போக மீதம் பணம் என்னிடம் உள்ளதை ஒப்புக் கொண்டுள்ளதால் அந்த தொகையை வைத்து என்னை நான் பராமரித்து கொண்டிருப்பேன் என்றாலும் வழக்கிற்காக பட்டினியாக இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றார் சரியல்ல. தற்போது என்னுடைய மாத ஊதியம் ரூபாய் ஒரு லட்சம் என்றால் இல்லை. ரூ.59,000/- சம்பளம் பெறுகிறேன். இந்த மனு தாக்கல் செய்யப்பட்ட பிறகு என்னுடைய சீதன பொருட்களை நான் திரும்ப பெற வேண்டும் என்று மனு தாக்கல் செய்திருந்தேன் என்றாலும் ஆனால் அந்த மனு உத்தரவு ஆவதற்கு முன்பாகவே எதிர்மனுதாரர்கள் வீட்டிலிருந்து என்னுடைய சீதன பொருட்களை நான் எடுத்துக் கொண்டேன் என்றால் சரிதான்.

15. என்னுடைய சீதன நகைகள் 1ஆம் எதிர்மனுதாரிடம் இருப்பதாக நான் என்னுடைய சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அந்த நகைகளை மீட்க வேண்டும் என்று இந்த நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரிதான். அந்த சீதன நகைகளை எதிர்மனுதாரர்கள் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ஆம் எதிர்மனுதாரருக்கு பாண்டிச்சேரியில் தான் சொந்த வீடு உள்ளது என்றால் சரிதான். இங்கு அவருக்கு வீடு இல்லை என்றாலும் சரிதான். திருமணத்திற்கு பிறகு ஓரகடத்தில் வாடகை வீட்டில் குடியிருந்தோம் என்றால் சரிதான். நான் என்னுடைய மனுவில் இந்த வாடகை வீட்டில் இருந்தபோது 05/02/2024 அன்று அலமாரியில் பெண்கள் அணியும் இரண்டு மேலாடைகளும் உள்ளாடைகளும் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அது

வழக்கிற்காக நான் பொய்யாக குறிப்பிட்டது என்றால் சரியல்ல.

16. திருமணம் முடிந்த பிறகு தான் நானும் 1ஆம் எதிர்மனுதாரரும் அந்த வீட்டிற்கு புதியதாக வாடகைக்கு குடியேறினோம் என்றால் இல்லை. திருமணத்திற்கு முன்பாகவே டிசம்பர் மாதத்தில் அவர் அந்த வீட்டிற்கு குடிபோகியுள்ளார். திருமணத்திற்கு முன்பாகவே நானும் அந்த வாடகை வீட்டிற்கு சென்று உள்ளேன் என்றால் சரிதான். 1ஆம் எதிர்மனுதாரர் பெற்றோர் திருமண பத்திரிகையை எங்கள் வீட்டில் கொடுத்துவிட்டு புதிய வீட்டை வந்து பார்க்கும்படி சொன்னதன் பேரில் நானும் என்னுடைய பெற்றோரும் அங்கு சென்றோம்.திருமணத்திற்கு முன்பாக நான் அந்த வீட்டிற்கு பலமுறை சென்று உள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பெற்றோருடன் ஒருமுறை சென்றது மட்டும்தான். நான் வழக்கத்திற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் திருமணத்திற்கு முன்பாகவே நான் பலமுறை அந்த வாடகை வீட்டிற்கு சென்று உள்ளேன் என்றால் சரியல்ல.

17. திருமணத்திற்கு முன்பாகவே அவருடைய வீட்டின் அனைத்து விவரங்களும் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் 1ஆம் எதிர்மனுதாரர் மீது வீண்பழி சுமத்த வேண்டும் என்பதற்காக நான் மனுவில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. திருமணம் நடந்த பிறகு ஜூன் மாதம் வரை நான் 1ஆம் எதிர்மனுதாருடன் அந்த வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரிதான். நான் அவருடன் ஒன்றாக வாழ்ந்த அந்த காலத்தில் அவர் என்னை உடல் ரீதியாக துன்புறுத்தி உள்ளாரா என்றால் வேறு ஒரு பெண்ணின் ஆடைகளை நான் அங்கு பார்த்த பிறகு அதை எடுத்து வெளியில் போடும்படி கேட்டேன் அப்போது அவர் என்னிடம் தகராறு செய்து என்னை பிடித்து

தள்ளி அந்த ஆடையை அவர் வாங்கிக் கொண்டார். அந்த ஆடைகள் வீட்டிலேயே தான் இருந்தது நான் எப்போதெல்லாம் அது குறித்து அவரிடம் கேட்கிறேனோ அப்போதெல்லாம் அவர் என்னிடம் சண்டை போடுவார்.

18. அதில் எனக்கு காயங்கள் ஏதேனும் ஏற்பட்டதா அதற்காக நான் சிகிச்சை எடுத்துக் கொண்டேனா என்றால் நான் மருத்துவர் என்பதால் அதற்கான மருந்துகளை நானே உட்கொண்டேன். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிர்மனுதாரர் எந்த காலத்திலும் என்னை உடல் ரீதியாகவோ மனரீதியாகவோ துன்புறுத்தியது இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் ஒன்றாக வாழ்ந்த காலத்தில் 1 ஆம் எதிர்மனுதாரர் என்னிடம் வரதட்சனை குறித்து ஏதேனும் கேட்டு உள்ளாரா என்றால் அவர்கள் கேட்ட ஐந்து லட்சத்தில் ரூபாய் 3,50,000/– எனினும் கொடுக்கவில்லை என்று என்னிடம் கேட்டுள்ளார். 1 ஆம் எதிர்மனுதாரர் எனக்கு சீதனமாக கொடுக்கப்பட்ட நகைகளின் எடை தெரியவில்லை என்பதால் அதன் விவரங்களை என்னிடம் கேட்டார். நான் அவரிடம் வாய்மொழியாக சொன்னது அவருக்கு புரியவில்லை என்பதால் அந்த விவரங்களை நான் எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்தேன்.

19. நான் சாட்சியம் அளித்தது போன்று 1 ஆம் எதிர்மனுதாரர் எந்த காலத்திலும் என்னிடம் பணமோ நகைகள் குறித்தோ கேட்டதில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்ல. என்னுடைய மனுவில் 1 ஆம் எதிர்மனுதாரர் என்னை வற்புறுத்தி உடலுறவுக்கு அழைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு விருப்பம் இல்லை என்றாலும் கூட அவர் வற்புறுத்தி அதில்

ஈடுபடவைப்பார். நான் வழக்குக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் 1 ஆம் எதிர்மனுதாரர் என் மீது உள்ள அதீத அன்பின் காரணமாக என்னுடன் உடலுறவில் ஈடுபடுவார் என்றாலும் அவர் என்னை ஒருபோதும் கட்டாயப்படுத்தி அவ்வாறு உடலுறவில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கில் குறிப்பிடுவது போன்று 1 ஆம் எதிர்மனுதாரருக்கு வேறு எந்த பெண்களுடனும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

**வேண்டுக்கோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது**

S/d- K.Nilavarasan, 01.06.2026

District Munsif cum Judicial Magistrate,

Thiruporur.